# விபத்தில் பலியானோர் குடும்பத்திற்கு உதவி

நத்தம், ஜூலை 31: லைப் பவுண்டேஷன் ஆப் இந்தியா நிறுவனம் மத்திய அரசின் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவற்றில் விபத்துக் காப்பீடு, இயற்கை மரணமடைந்தவர்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது. நேற்று நத்தம் கோவில்பட்டியில் நடந்த நிகழ்ச்சியில் செந்துறையை சேர்ந்த சாலை விபத்தில் பலியான பொன்ராம் என்பவர் குடும்பத்திற்கு ரூ.ஒரு லட்சம் காசோலையும், அதே ஊரை சேர்ந்த இயற்கை மரணமடைந்த சின்னு மற்றும் சுசிலா ஆகியோரின் வாரிசுகளுக்கு தலா ரூ.10 ஆயிரம் நிதியும் வழங்கப்பட்டது. திட்ட மேலாளர் ராஜா ஆறுமுகச்சாமி, மக்கள் தொடர்பு ஆய்வாளர் ஜெயராம் ஆகியோர் உதவி தொகைகளை வழங்கினர்.

## மாணவர் கூட்டமைப்பு துவக்கவிழா

திண்டுக்கல், ஜூலை 31: திண்டுக்கல் ஆர்விஎஸ் பாலிடெக்னிக் கல்லூரியில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி துறை சார்பில் மாணவர் கூட்டமைப்பு துவக்கவிழா நடைபெற்றது. முதலாம் ஆண்டு மாணவர் அருண் வரவேற்றார். முதல்வர் நடராஜன் தலைமை வகித்தார். முதன்மை நிர்வாக அலுவலர் பாலசுப்ரமணியம், டெக்ஸ்டைல் ஆலோசகர் ராமசுப்ரமணியம் கலந்து கொண்டனர்.



இயற்கை மரணம் அடைந்த சுசிலா என்ற பெண்ணின் குடும்பத்தாருக்கு, லைப் பவுண்டேசன் இந்திய சார்பில் இயக்குனர் சரவணக்குமார் காசோலை வழங்கினார்.